DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.210/2023

**prosecution witness: LW-13 as PW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜீவரத்தினம் | தொழில் | : | காவல் ஆய்வாளர் ஏர்வாடி தர்ஹா காவல் நிலையம் |
| த/பெ. | : | அருள்மாது | வயது | : | 55 |
| ஊர் | : | இராமநாதபுரம் | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>02.12.2025</u>

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

**<u>முதல் விசாரணை:-</u>**

1) நான் தற்போது ஏர்வாடி தர்ஹா காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் ஆக பணிபுரிந்து வருகிறேன். 02.10.2022ம் தேதியன்று நான் மண்டபம் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது பாம்பன் காவல் நிலைய குற்ற எண் 174/2022 சட்டப்பிரிவுகள் 279, 337, 304A, இதச வழக்கின் சார்பு ஆய்வாளர் திரு. முனியாண்டி அவர்கள் பதிவு செய்து எனது விசாரணைக்கு வைத்த வழக்கு கோப்பை 02.10.2022ம் தேதி பார்வையிட்டு 10.45 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான பாம்பன் பாலம் மேற்கு பக்கம் உள்ள வேகத்தடை அருகே சென்று சாட்சிகள் விஜயகுமார், லெட்சுமணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ. 3, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

2) பின்பு சாட்சிகள் தமிழ்செல்வன், சத்தீஸ்குமார், கண்ணப்பன், தமிழரசன், விஜயகுமார், லெட்சுமணன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயம்பட்டிருந்த சுரேஷ் என்பவரது இறந்து உடல்மீது இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் இருந்து பஞ்சாயத்தார்கள் தமிழரசன், நித்தியானந்தம், நாகராஜன், அசோக்குமார், கண்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் 12.30 மணி முதல் 14.00 மணி வரை பிரேத விசாரணை செய்தேன். பின்பு பிரேத பரிசோதனை க்கு பாம்பன் காவல் நிலைய தலைமைக் காவலர் 1770 திரு.காளிமுத்து என்பவரை பிரேத பரிசோதனை அலுவலலுக்கு

நியமித்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3) பின்பு 3.10.2022 ம் தேதி 10.00 மணிக்கு பாம்பன் பஸ் ஸ்டாப் அருகில் நின்ற இவ்வழக்கின் எதிரி முனியசாமியை காரணம் கூறி கைது செய்து நிலையப் பிணையில் விடுவித்தேன். அன்றைய தினமே இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய டி.என்.92 சி 9729 என்ற எண்ணுள்ள டிப்பர் லாரியை மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பினேன்.

4) 30.11.2022 ம் தேதி இவ்வழக்கில் இறந்த நபர் ஓட்டி வந்த டி.என்.63 பி.கே. 4352 என்ற எண்ணுள்ள பல்சர் பைக்கை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்த அனுப்பினேன். 15.12.2022 ம் தேதி இவ்வழக்கில் இறந்த சுரேஷ்சின் பின்னால் அமர்ந்து வந்த வேலுச்சாமி என்ற உதயாவை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5) 10.01.2023 ம் தேதி இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய மற்றும் விபத்துக்குள்ளான மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **அவர் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6) பின் 25.01.2023 ம் தேதி இவ்வழக்கின் இறந்த சுரேஷ்ன் உடலை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் வினிதா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **அவர் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7) 16.02.2023 ம் தேதி இவ்வழக்கில் காயமுற்ற வேலுச்சாமி என்ற உதயாவிற்கு சிகிச்சை அளித்த இராமநாதபுரம் அரசு உதவி மருத்துவர் திரு.விக்ரமன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **அவர் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ.9 ஆகவும், விபத்து பதிவேடு அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

8) பின்னர் அன்றைய தினமே இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு.முனியாண்டி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் எனது

விசாரணையை முடித்து எதிரி மீது 16.02.2023ம் தேதி பிரிவுகள் 279, 337, 304A இதசபடி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கின் புகார்தாரர் எத்தனை மணிக்கு தனக்கு தகவல் தெரிந்ததாக கூறியுள்ளார் என்றால் 02.10.2022ம் தேதி காலை சுமார் 7.30 மணியளவில். இராமேஸ்வரத்திற்கு சுற்றுலா வந்ததாக சொன்னவர்கள் எந்த எந்த வாகனங்களில் வந்தார்கள் என்றால் அவர்கள் பைக்கில்தான் வந்ததார்கள். சம்பவம் நடந்த அன்று எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு வந்து புகார் அளித்தார் என்றால் 02.10.2022ம் தேதி காலை 10.15 மணிக்கு சார்பு ஆய்வாளரிடம் புகார் கொடுத்தார். சம்பவம் நடந்த அன்று எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரிதான்.

2. பாம்பனில் இருந்து இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு வர எவ்வளவு நேரம் ஆகும் என்றால் வாகனத்தில் சென்றால் அரைமணி நேரம் ஆகும். பாம்பனில் இருந்து இராமேஸ்வரத்திற்கு எவ்வளவு துூரம் என்றால் சுமார் 10 கி.மீ. இருக்கும். நான் சொல்வதுபோல் விபத்து காலை 7.00 மணிக்கு நடைந்திருந்தால் அதற்கு பின்புதான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்திருக்கமுடியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் புகார்தாரர் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். விபத்து நடந்தபின் தகவல் உறவினர்தான் தெரிவிக்க வேண்டும் என்றால் சரியல்ல யார் வேண்டுமானாலும் தெரிவிக்கலாம்.

3. சம்பவ இட சாட்சிகள் சதீஷ்குமார், கண்ணப்பன் ஆகியோர்களிடமிருந்து புகார் ஏன் வாங்கவில்லை என்றால் அவர்கள் புகார் தரவில்லை அதனால் நான் புகார் வாங்கவில்லை. அவர்கள் சாட்சியாக மட்டும் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். உறவினர்களான சதீஷ்குமார் மற்றும் கண்ணப்பன் ஆகியார்கள் சம்பவ இடத்தில் இல்லை என்பதால்தான் இறந்த நபரின் மச்சான்கள் என்பதால் புகார் மனு வாங்கினேன் என்றால் சரியல்ல. பொதுவாக இரு வாகனங்களுக்கிடையேயான இடைவெளி சுமார் 10 மீ இருக்க வேண்டும் என்றால் சரிதான். காயம்பட்ட நபர் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக எனது விசாரணை மூலம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

4. புகாரில் எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக கூறவில்லை என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார் என்று எனது விசாரணை தெரிந்து கொண்டீர்களா என்றால் தமிழ்செல்வன்தான் அவர் கைப்பட எழுதினார். சம்பவ இடத்திற்கு தெற்குபக்கமாக விநாயகர் கோவில் உள்ளது என்றால் சரிதான் அது பாலத்திற்கு கீழ் உள்ளது. சம்பவ இடத்திற்கு அருகில் இரண்டு பக்கமும் நிழற்குடை உள்ளது என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு தெற்குபக்கம் மண்டபம் பேரூராட்சி பூங்கா உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு வடக்குபக்கம் பழைய இரயில்

தண்டவாளமும், அதற்கு வடக்கு பக்கம் புதிதாக கட்டப்பட்டுவரும் இரயில் தண்டவாளமும் உள்ளது என்றால் சரிதான். வேகத்தடையை காட்டக்கூடிய சிவப்பு எலக்ட்ரானிக் மின் விளக்கு உள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கான காயச்சான்று வழங்கிய மருத்துவர் அதில் No opinion என்று கருத்துரை வழங்கியுள்ளார் என்றால் சரிதான்.

5) நான் சொல்வது போல் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் பார்வை மகஜர்வரைபடம் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சிகளை முறையாக புலன்விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து கைது செய்ய வில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.12.02 12:40:49 +0530